**மதுக்கரை நகராட்சியில் 31.10.2023ம் நாள் நடைபெற்ற சாதாரண மன்றக்கூட்டத்தின் தீர்மான நகல்கள்.**

**மன்றப் பொருள் எண்.01**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7628/2022/எம்.ஏ.1, நாள்.08.06.2022 ன் படி, 2022 - 2023 ம் ஆண்டு வரவு செலவுதிட்ட அறிக்கையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 28 நகராட்சிகளுக்கு அரசின் சிறப்பு நிதி தலா ரூ. 2.00 கோடி ஒதுக்கீடு செய்து அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் தேர்வு செய்து முன் மொழிவினை 03.08.2022 அன்று சாலைப்பணி, குடிநீர் மற்றும் எல்இடி விளக்குகள் அமைத்தல் போன்ற பணிகளை தேர்வு செய்து மன்றம் அனுமதித்து கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது.

மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரைப்படி மாற்றுப்பணிகளை தேர்வு செய்து அனுப்புமாறு அறிவுறுத்தியதற்கிணங்க வார்டு எண். 24 ஷீபா நகர் பகுதியில் புதியதாக 2 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்ட ரூ.65.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டும் பணிகளுக்காக முன் மொழிவுகள் அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 0726/2022/இ1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.265**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.02**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 24 ஷீபா நகர் பகுதியில் புதியதாக 2 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்ட மண் பரிசோதனை செய்தமைக்கு முதல்வர், கோயம்புத்தூர் தொழில் நுட்ப கல்லூரி, கோயம்புத்தூர் அவர்களிடமிருந்து கட்டணத் தொகை ரூ. 70,800/- க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 0726 /2023/இ1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.266**

அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.03</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31585/2023/அம்ருத்-1, நாள்.20.07.2023 ன் படி, நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதியதாக பூங்கா அமைப்பதற்கு கருத்துரு தயார் செய்து சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 23 பாலு என்கிளேவ் பகுதியில் பூங்கா அமைப்பதற்கு கருத்துருக்கள் தயார் செய்து அனுப்பப்பட்டிருந்தது இந்நிலையில் மேற்கண்ட பணிக்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | மத்திய அரசு பங்களிப்பு தொகை (ரூ.இலட்சத்தில்) | மாநில அரசு பங்களிப்பு தொகை (ரூ.இலட்சத்தில்) | நகராட்சி பங்களிப்பு/KNMT தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | AMRUT 2.0 – மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 23, க.ச.எண் 676/2 & 677/1 பாலு என்கிளேவ் பகுதியில் புதியதாக பூங்கா அமைத்தல் | 30.00 | 7.00 | 9.00 | 14.00 |

மேற்கண்ட பணிக்குரிய நகராட்சி பங்களிப்பு தொகை ரூ14.00 இலட்சத்தினை அம்ருத் 2.0 திட்டத்திற்கு வழங்குவதற்கும் மேலும் மேற்கண்ட தொகையினை அம்ருத் 2.0 திட்ட வங்கி கணக்கிற்கு மாற்றம் செய்து வரவு வைப்பதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1152/2023/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.267</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.04</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட அறிவொளி நகர் பகுதியில் உள்ள பொதுகழிப்பிடத்திற்கு புதியதாக செப்டிக் டேங் அமைத்தல் பணிக்கு ரூ. 3.00/- இலட்சம் மதிப்பீட்டிற்கு 20.10.2023ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு .

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திரு. ராஜீபழனிமுத்து , மதுக்கரை | மதிப்பீட்டினை விட 0.33% அதிகம் |
| 2 | திரு. மகேந்திரன், மதுக்கரை | மதிப்பீட்டு விலை விகிதம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. மகேந்திரன், மதுக்கரை (மதிப்பீட்டு விலை விகிதம்) ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 1999/2023/இ1)

<u>அலுவலக குறிப்பு</u> :

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.268</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.05</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 அன்னை நகர் பகுதியில் புதியதாக குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் பணிக்கு ரூ. 1.50/- இலட்சம் மதிப்பீட்டிற்கு 20.10.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு .

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திரு. ராஜீபழனிமுத்து , மதுக்கரை | மதிப்பீட்டினை விட 0.79% அதிகம் |
| 2 | திரு. மகேந்திரன், மதுக்கரை | மதிப்பீட்டு விலை விகிதம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. மகேந்திரன், மதுக்கரை (மதிப்பீட்டு விலை விகிதம்) ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 1999/2023/இ1)

<u>அலுவலக குறிப்பு</u> :

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.269</u>**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.06**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27 அட்லாண்டிக் நகர் பகுதியில் புதியதாக குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் பணிக்கு ரூ. 2.00/- இலட்சம் மதிப்பீட்டிற்கு 20.10.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு .

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திரு. ராஜீபழனிமுத்து , மதுக்கரை | மதிப்பீட்டினை விட 0.75% அதிகம் |
| 2 | திரு. மகேந்திரன், மதுக்கரை | மதிப்பீட்டு விலை விகிதம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. மகேந்திரன், மதுக்கரை (மதிப்பீட்டு விலை விகிதம்) ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 1999/2023/இ1)

**தீர்மானம் எண்.270**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.07**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22 சர்ச் காலனி பகுதியில் உள்ள பொதுகழிப்பிடத்தில் மராமத்து பணிகள் செய்ய ரூ. 1.00/- இலட்சம் மதிப்பீட்டிற்கு 20.10.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திருவாளர். மனோ அசோசியேட்ஸ் | மதிப்பீட்டினை விட 0.26% குறைவு |
| 2 | திருவாளர்.எஸ்.கே.ஆர் எண்டர்பிரைசஸ் | மதிப்பீட்டினை விட 0.08% குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். மனோ அசோசியேட்ஸ் (மதிப்பீட்டினை விட 0.26% குறைவு) அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 1999/2023/இ1)

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.271**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.08**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23 ராஜேஸ்வரி நகர் மற்றும் தர்மராஜா நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் பணிக்கு ரூ. 1.00/- இலட்சம் மதிப்பீட்டிற்கு 20.10.2023ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திரு. ராஜீபழனிமுத்து , மதுக்கரை | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திரு. மகேந்திரன், மதுக்கரை | மதிப்பீட்டினை விட 7.91% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ராஜீபழனிமுத்து, மதுக்கரை (மதிப்பீட்டு விலை விகிதம்) ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 1999/2023/இ1)

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.272**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.09**

மதுக்கரை நகராட்சி அலுவலகத்தில் தற்சமயம் கானொலி காட்சி அறை இல்லாததால் கானொலி வழியாக நடத்தப்படும் ஆய்வுக்கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு சிரமம் ஏற்படுகிறது. எனவே அலுவலகத்தின் தரைதளத்தில் பயன்பாடு இல்லாமல் உள்ள கழிப்பறையினை அகற்றிவிட்டு புதிதாக கானொலி காட்சி அறை (Video Conference) அமைப்பதற்கு ரூ.1.00 இலட்சத்திற்கு செலவின உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். /2023/இ1)

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.273**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.10**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட 10வது வார்டு அண்ணா நகர் பகுதியில் அமைந்துள்ள கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி இல்லாததால் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு இயலாமல் உள்ளதாக பொதுமக்கள் கோரிக்கை வைத்ததை தொடர்ந்து மேற்கண்ட கழிப்பிடத்தில் தண்ணீர் வசதி ஏற்படுத்தி கொடுப்பதற்கு ரூ.14,500/-க்கு (ரூபாய் பதினான்காயிரத்து ஐநூறு மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி ஒப்படைப்பு பணியாக நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.எம். மகேந்திரன் அவர்கள் மூலம் கழிப்பறையின் பயன்பாட்டுப்பணிகள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். /2023/இ1)

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.274**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.11**

மதுக்கரை நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற தலைவர் அறையில் Wall Paneling பகுதியில் கரையான் உருவாகி அரிப்பு ஏற்பட்டது. இவ்வறையில் கரையான் மருந்து அடிப்பதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.4770/- ஆகும். மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்படைப்பு பணியாக M/s. Green Farm Pest Control அவர்கள் மூலம் கரையான் தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். /2023/இ1)

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.275**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.12**

மதுக்கரை நகராட்சி அலுவலகத்திற்குட்பட்ட 13வது வார்டு வஞ்சியம்மன் கோவில் வீதி பகுதியில் தற்சமயம் மாநில நெடுஞ்சாலைத்துறையினரால் சாலை விரிவாக்கப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட சாலையில் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு பதிக்கப்பட்டுள்ள பகிர்மாக குழாய்கள் முழுவதுமாக சேதமடைந்துள்ளது. எனவே மேற்கண்ட பகிர்மான குழாய்களை மாற்றி அமைக்கவும், இதர பணிகள் மேற்கொள்வதற்கும் ரூ.2.00 இலட்சத்திற்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட விபரத்திற்கு பழுதான குழாய்களுக்கு பதிலாக புதிய பகிர்மானக் குழாய் பதிப்பதற்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். /2023/இ1)

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.276**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.13**

மதுக்கரை நகராட்சி பொதுசுகாதார பிரிவில் வெளிக்கொணர்வு முகமை மூலம் வீடுகள் தோறும் குப்பைகள் சேகரிக்கப்பட்டு நுண்உர மையத்தின் மூலம் உரமாக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் பொதுசுகாதார பணிக்காக வாங்கப்பட்ட TN99R1382 என்ற எண் கொண்ட Dumper Placer வாகனம் தற்சமயம் பயன்பாடு இல்லாமல் நிறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட Dumper Placer வாகனத்தினை டிப்பர் லாரியாக மாற்றம் செய்தால் சேகரிக்கப்படும் குப்பைகளை எளிதாக உரமையத்திற்கு எடுத்து செல்ல முடியும். எனவே மேற்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் விபரம் | விலைப்புள்ளியின் மதிப்பு |
|---|---|---|
| 1 | M/s. Lakshmi Auto Diesel works | ரூ.8,49,482/- |
| 2 | M/s. JVK Auto Diesel works | ரூ.9,50,136/- |
| 3 | M/s. Sri Ganapathy motor works | ரூ.9,04,706/- |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s. Lakshmi Auto Diesel works நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.1695/2023/எச்1)

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.277**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.14**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 குரும்பபாளையம் மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து ராக்கியண்ணன் கோவில் வீதி, அண்ணா வீதி, பழனியாண்டவர் கோவில் வீதி, உயர்நிலைப்பள்ளி வீதி,, எம்.ஜி.ஆர். வீதி போன்ற பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட பகுதிகளில் உள்ள வீடுகள் மேடான பகுதிகளில் உள்ளதால் தற்சமயம் சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே மேற்கண்ட பகுதிகளுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்வதற்கு Online Booster பணிகள் மேற்கொள்ள ரூ.1.30 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் விபரத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. . (ந.க.எண். /2023/எச்1)

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.278**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.15**

மதுக்கரை நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் எண்.TN 99 R1382 டம்பர் பிளேசர் வாகனத்திற்கான தகுதி சான்று 21.10.2023 அன்றுடன் முடிவடைகிறது. இவ்வாகனம் நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்காக பொது வழி சாலையில் இயக்கப்பட வேண்டியுள்ளது . வாகனம் பழுது நீக்கம் செய்யவும், வருடாந்திர பாரமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட வாகனத்தை பழுது நீக்கம் செய்து தகுதி சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) ஆகும் மேற்கொண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1906/2023/எச்1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.279**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.16**

மதுக்கரை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பொது மக்களுக்கு குப்பைகளை தரம் பிரித்து வழங்க வேண்டியதன் பழக்கத்தை உருவாக்கும் விதத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தரமான காகிதத்தில் துண்டு பிரசுரங்கள் (அறிவிப்பு) அச்சடித்து விநியோகம் செய்வதற்கு 13.10.2023ம் நாளில் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்று, மூன்று விலைபுள்ளிகளின் விபரம் வருமாறு .

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | A4 அளவு வளுவளுதாள் ஒன்றுக்கு | விலை பட்டியல் ரூ. |
|---|---|---|---|
| 1 | கோவை ஆதி தொழுநோயாளிகள் மறுவாழ்வு நலச்சங்கம். கோயம்புத்தூர் | 1க்கு | ரூ. 5/- |
| 2 | முரளி ஆப்செட் கோயம்புத்தூர் | 1க்கு | ரூ .6.10/- |
| 3 | அம்மன் பிரிண்டிங் பிரஸ் கோயம்புத்தூர் | 1க்கு | ரூ.6.60/- |

மேற்கண்ட விபரத்திற்கு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள அளித்துள்ள கோவை ஆதி தொழுநோயாளிகள் மறுவாழ்வு நலச்சங்கம் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்பதற்கும் , பொதுசுகாதாரத்தின் அவசரம் அவசியம் கருதி துண்டு பிரசுரங்கள் அச்சடிக்கும் பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம்

ரூ.1.70/- லட்சத்தினை (ரூபாய் ஒரு லட்சத்தி எழுபதாயிரம் மட்டும்), நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண்.1813/2023/எச்1)

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரத்தின் நலன் கருதி அவசர அவசியமாக வேலை உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.280</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.17</u>**

மதுக்கரை நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு வருடாந்திர சீருடை வழங்க அரசாணை எண்.168 நாள்.16.11.2015ன் படி சீருடை வாங்கி வழங்க வேண்டியுள்ளது. நகராட்சியின் நிரந்தர தூய்மை பணியாளர்கள் , ஓட்டுநர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், களப்பணி உதவியாளர், இரவுக்காவலர்கள் ஆகிய அனைவருக்கும் அரசு நிறுவனமான கோவை மாவட்ட ஆயுத சேமப்படை காவலர் குடும்பநல தொழிற்கூட்டுறவு சங்கத்தில் இருந்து வருடாந்திர சீருடைகள் வாங்கி தைத்து வழங்கவும். அதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/- ( ரூபாய் ஒரு லட்சம் மட்டும் ) நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2074/2023/எச்1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.281</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.18</u>**

மதுக்கரை நகராட்சி எல்லைக்குட்பட்ட மதுக்கரை கிராமம், க.ச.எண்.723/3, 724/4, 724/5, 725/4Aல் 4.74 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு. பி. கிருஷ்ணராஜ் மற்றும் நான்கு நபர்கள் கதவு எண்.18/643 பாலக்காடு மெயின் ரோடு, மரப்பாலம், மதுக்கரை அஞ்சல், கோவை-105 என்பவரின் விண்ணப்பம் மீதான கோவை உள்ளூர் திட்டக் குழுமம் இணை இயக்குநர், அவர்களின் கடிதம் எண். CBELPA/C9SZSTDO/2023 /2022/TCP நாள்.15/06/2023ல், மேற்படி மனைப்பிரிவிற்கு ம.வ./கோ.உ.திகு எண்.322/2023 எண்ணிடப்பட்டு மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகள், பொது ஒதுக்கீடு மற்றும் TANGEDCO ஒதுக்கீடு ஆகிய இடங்களை தானசாசன ஆவண மூலம் மதுக்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.4578/2023 நாள்.07.06.2023ல் மதுக்கரை நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்து பெறப்பட்டு, அதன் அடிப்படையில் தொழில்நட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் அமையும் சாலைகளில் தெருவிளக்குடன் கூடிய மின் கம்பம் மற்றும் LED தெருவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் திரும்ப பெறக்கூடிய வைப்புத்தொகை ரூ.5,00,000/- னை 28.10.2023ல் நகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளதாகவும், மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகள் தார்சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளது எனவும், குடிநீர் பகிர்மான குழாய்கள், சிறுபாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால் ஆகியவை நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது எனவும் நகராட்சி பொறியாளர் 20.10.2023 ல் சான்று வழங்கியுள்ளார்.

மேலும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய அனுமதிக்கட்டணம், கூர்ந்தாய்வுக்கட்டணம் மற்றும் அபிவிருத்திக்கட்டணங்கள் ரூ.2,54,000/-ஐ நாள்.28.10.2023ல் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை (TANGEDCO இடம்) நகராட்சியின் பராமரிப்பிற்கு ஏற்றுக்கொள்ளவும், மனுதாரரின் உத்தேச மனைகளுடன் கூடிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1228/2023/எப்1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. உத்தேச மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு (TANGEDCO இடம்) இடங்களை நகராட்சியின் பராமரிப்பிற்கு ஏற்றுக் கொள்ளவும், 106 மனைகளுடன் கூடிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்.282</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.19</u>**

மதுக்கரை நகராட்சி எல்லைக்குட்பட்ட மதுக்கரை கிராமம், க.ச.எண்.291/2, 291/3ல் 2.03 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு. நூர் அகமது மற்றும் சையீரா பானு நூர் அகமது காட்டேஜ் எண்.5 டைகர் ஹில்ஸ், டான் டீ ரோடு, குன்னூர் என்பவரின் விண்ணப்பம் மீதான கோவை உள்ளூர் திட்டக் குழுமம் இணை இயக்குநர், அவர்களின் கடிதம் எண். CBELPA/8B5TH536/2023/2023/TCP நாள்.04/09/2023ல், மேற்படி மனைப்பிரிவிற்கு ம.வ./கோ.உ.திகு எண்.431/2023 எண்ணிடப்பட்டு மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகள், பொது ஒதுக்கீடு மற்றும் TANGEDCO ஒதுக்கீடு ஆகிய இடங்களை தானசாசன ஆவண மூலம் மதுக்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.6917/2023 நாள்.25.08.2023ல் மதுக்கரை நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்து பெறப்பட்டு, அதன் அடிப்படையில் தொழில்நட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் அமையும் சாலைகளில் தெருவிளக்குடன் கூடிய மின் கம்பம் மற்றும் LED தெருவிளக்குகள் அமைக்க நகராட்சிக்கு ரூ.1,33,200/- மற்றும் திரும்ப பெறக்கூடிய வைப்புத்தொகை ரூ.2,10,000/- னை 28.10.2023ல் நகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளதாகவும், மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகள் தார்சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளது எனவும், குடிநீர் பகிர்மான

குழாய்கள், சிறுபாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால் ஆகியவை நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது எனவும் நகராட்சி பொறியாளர் 27.10.2023 ல் சான்று வழங்கியுள்ளார்.

மேலும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய அனுமதிக்கட்டணம், கூர்ந்தாய்வுக்கட்டணம் மற்றும் அபிவிருத்திக்கட்டணங்கள் ரூ.101000/-ஐ நாள்.28.10.2023ல் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை (TANGEDCO இடம்) நகராட்சியின் பராமரிப்பிற்கு ஏற்றுக்கொள்ளவும், மனுதாரரின் உத்தேச மனைகளுடன் கூடிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2108/2023/எப்1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. உத்தேச மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு (TANGEDCO இடம்) இடங்களை நகராட்சியின் பராமரிப்பிற்கு ஏற்றுக் கொள்ளவும், 35 மனைகளுடன் கூடிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்.283</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அங்கீகரிக்கப்பட்டது.

(ஒ/ம்) நா. நூர்ஜஹான்

இடம் : மதுக்கரை — நகர் மன்றத்தலைவர்

நாள் : 31.10.2023 — மதுக்கரை நகராட்சி

---

//உண்மை நகல் உத்திரவுபடி//

V. [signature] 02.11.2023

ஆணையாளர்

மதுக்கரை நகராட்சி